සියලු හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| | | |
|---|---|---|
| තෙවන වාර පරීක්ෂණය | - | 2024 |
| மூன்றாம் தவணைப் பரீட்சை | - | 2024 |
| THIRD TERM EXAMINATION | - | 2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ඉස්ලාම් | I, II | ශ්‍රේණිය | 10 | පැය තුනයි විනාඩි දහයයි | |
| இஸ்லாம் | I, II | தரம் | 10 | மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் | |
| ISLAM | I, II | GRADE | 10 | THREE HOURS & TEN MINUTES | |

## புள்ளித் திட்டம்

### இஸ்லாம் I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 4 | **11** | 4 | **21** | 2 | **31** | 1 |
| **02** | 2 | **12** | 2 | **22** | 1 | **32** | 1 |
| **03** | 3 | **13** | 3 | **23** | 4 | **33** | 4 |
| **04** | 3 | **14** | 1 | **24** | 2 | **34** | 4 |
| **05** | 2 | **15** | 2 | **25** | 4 | **35** | 2 |
| **06** | 2 | **16** | 1 | **26** | 2 | **36** | 3 |
| **07** | 3 | **17** | 1 | **27** | 1 | **37** | 4 |
| **08** | 4 | **18** | 4 | **28** | 3 | **38** | 2 |
| **09** | 1 | **19** | 2 | **29** | 2 | **39** | 1 |
| **10** | 3 | **20** | 1 | **30** | 3 | **40** | 3 |

## இஸ்லாம் II

**(01)**

1) தானாகவே இறந்த மீன், வெட்டுக்கிளி (இவை சாப்பிட அனுமதிக்கப்பட்டுள்ளன) இரத்தம் சிந்தாத பிராணிகளான எறும்பு, தேனீ போன்றன. சாப்பிட அனுமதிக்கப்பட்ட இறந்த பிரணிகளின் எலும்பு, கொம்பு, நகம், உரோமம், சிறகு போன்றவை. தாய்ப்பால், மிகச் சிறிய அளவில் உடையில், உடம்பில் படும் இரத்தம். *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*

2) ஆண் பெண் உடலுறவு கொள்ளல், விந்து வெளிப்படல், ஹைழ், நிபாஸ் ஏற்பட்டு நின்றுவிடல், புதிதாக இஸ்லாத்தில் நுழைதல், மரணமடைதல். *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*

3) ஐவேளைத் தொழுகை, ஸகாத், ரமழான் நோன்பு, ஹஜ் *(போன்ற பொருத்தமான இரண்டு)*

4) தவர்ருக் (இறுதி அத்தஹிய்யாத் இருப்பு), இப்திராஷ் (நடு இருப்பு)

5) குலுக் ஹஸன், அக்லாக் ஹஸனா, மகாரிமுல் அக்லாக், அதப், ஆதாப் *(ஏதேனும் இரண்டு)*

6) சமூகத்தில் ஒற்றுமை பேணப்படல், சமூகத்தில் ஒற்றுமை குலையாதிருத்தல், பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழியமைத்தல் *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*

7) ஈஜாப் - விற்பவர் குறித்த பொருளை விற்பதாக வெளிப்படுத்துவது. கபூல் - வாங்குபவர் அப்பொருளை வாங்குவதாக ஏற்றுக்கொள்வது.

8) ஸ்பெய்ன் - தாரிக் பின் ஸியாத், சிந்து – முஹம்மத் பின் காசிம்

9) முறையான உணவுப் பழக்கம், போதுமான உடற்பயிற்சி, சுத்தம் பேணுதல், ஓய்வு *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*

10) நடுநிலைமை பேணல் - வஸதிய்யா, நடுநிலைச் சமுதாயம் - உம்மதன் வஸதன்

(2x10 =20 புள்ளிகள்)

**(02)**

i. ரிஸலாத் - இறைத்தூதர்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள், போதனைகள்
ஹிதாயத் - ரிஸாலத்தை ஏற்று நடக்கும் மனோபக்குவம்

ii. இஸ்லாத்திலிருந்து தூரமாக்கப்டுவார், மன நிம்மதியை இழப்பார், பாவச் செயல்களில் வீழ்ந்துவிடுவார், மறுமையில் ஸகர் எனும் நரகில் நுழைவார். *(இது போன்ற வேறு பொருத்தமான மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)*

iii. தூய எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையில்லாது இருத்தல், ஷரீஆவின் அனுமதி, ஷரீஅத்தின் வரையறைகளை மீறதிருத்தல், நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்

(2+3+5 புள்ளிகள்)

**(03)**

i. இ∴லாஸ், தவ்பா, வரஉ, ஸுஹ்த்

ii. இவ்வுலகில் அல்லாஹ்வின் அன்பும், மனிதர்களின் அபிமானமும் கிடைக்கும். மறுமையில் மகத்தான கூலி கிடைக்கும். செல்வத்தில் அபிவிருத்தி உண்டாகும், ஆபத்துக்கள் அகன்றுவிடும், மனதுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் கிடைக்கும்.

iii. மனிதனின் ஈருலக வெற்றிக்கு தஸ்கியா அவசியம்.
நபிமார்கள் உலகிற்கு அனுப்பப்பட்டதன் நோக்கங்களில் ஒன்று தஸ்கியாவை மேற்கொள்ளல்.
சுவனம் நுழைவதற்கான தகைமைகளுள் ஒன்று தஸ்கியா.
நபி (ஸல்) உளப் பரிசுத்தம் வேண்டி அடிக்கடி பிரார்த்தனை செய்துள்ளார்கள்.
உளப் பரிசுத்தம் இல்லாத பாரிய அமல்கள் கூட அல்லாஹ்விடம் பயனற்றது.

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்ஹாப், உர்பு, கவ்லுஸ ஸஹாபி, மஸ்லஹா முர்ஸலா, சத்துத் ஸராஇ ., அஷ்ஷராஇஉஸ் ஸாபிகா *(ஏதேனும் இரண்டு)*

ii. இஜ்மாஉஸ் ஸரீஹ் : "தெளிவான இஜ்மாஉ" என இதனை அழைக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் வாழும் அனைத்து முஜ்தஹிதுகளும் ஏகோபித்த முடிவில் உள்ளனர் என்பது அவர்களது வார்த்தைகளின் மூலம் தெளிவாகத் தெரிய வந்திருப்பின் அதனையே இவ்வாறு அழைப்பர். இது இஜ்மாஉல் கவ்லி என்றும் அழைக்கப்படுகின்றது.

இஜ்மாஉல் அக்ஸரிய்யா : பெரும்பான்மையின் முடிவைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது. குறித்த ஒரு பிரச்சினையின்போது முஜ்தஹிக்களில் கணிசமானோர் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதையே இது குறிக்கும்.

இம்மாஉஸ் ஸுகூதி : மௌனம் சார்ந்த இஜ்மாஉ என இதனை அழைக்கலாம், குறிப்பிட்ட காலத்தில் வாழும் முஜ்தஹிதுகளில் ஒருவரோ, சிலரோ குறிப்பிட்ட பிரச்சினைக்கான முடிவு சம்பந்தமாகத் தமது இணக்கத்தையோ, முரண்பாட்டையோ. சாதித்திருப்பின் அம்முடிவை இவ்வாறு அழைப்பர்.

iii. மனிதனின் புலனறிவு பகுத்தறிவு இரண்டையும் நெறிப்படுத்த வஹியறிவு அவசியம்.
பகுத்தறிவினால் நன்மை, தீமையை அறிந்துகொள்ள முடியாத இடங்களில் வஹியறிவு அவசியம்.
மனித அறிவினால் அறிந்து கொள்ள முடியாத பல மறைவான விடயங்களை அறிந்து கொள்வதற்கு வஹி அவசியம்.
*(போன்ற விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

iv. ஹபஷா ஹிஜ்ரத், மதீனா ஹிஜ்ரத்

v. நிகாஹ் ஸஹீஹ் - நேரிய வழியிலான திருமணம்
முத்ஆ – தற்காலிகத் திருமணம்
ஒரு ஆண் பல பெண்களை மணத்தல் (பலதாரத் திருமணம்)
ஒரு பெண் பல ஆண்களை மணத்தல்
தந்தையின் மனைவியரை அவர் இறந்தபின் மகன் மணத்தல்
*(ஏதேனும் மூன்று)*

vi. மதீனாவிலிருந்து மக்கா வந்த யாத்திரிகள் சிலரை நபி (ஸல்) அவர்கள் அகபா எனுமிடத்தில் சந்தித்தார்கள். தான் அல்லாஹ்வின் தூதர் என அவர்களிடம் அறிமுகப்படுத்தினார்கள். ஏற்கனவே யூதர்கள் மூலமாகக் கடைசி நபி பற்றிய செய்தி அவர்களுக்குக் கிடைத்திருத்தமையால் நபி (ஸல்) அவர்கள் சொன்னதை எற்றுக்கொண்டார்கள். யஸ்ரிப் மீண்ட அவர்கள், தமது மக்களிடம் இந்த நற்செய்தியை எடுத்துரைத்தார்கள். இதன்பின், அடுத்த யாத்திரைக் காலத்தில் பன்னிருவர் மக்கா வந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். நபி (ஸல்) அவர்களின் உறுதிமொழியிலும் பங்கு கொண்டனர். இவர்களுடன் யஸ்ரிபில் இஸ்லாத்தைப் போதிப்பதற்காக முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அடுத்த யாத்திரைக் காலத்தில் நுபுவ்வத் 12 இல் யஸ்ரிப் வாசிகள் 72 பேர் மக்கா வந்தனர். நபி (ஸல்) அவர்களை சந்தித்ததோடு முன்னைய உறுதிமொழியைப் புதுப்பித்துக் கொண்டனர். இது "பைஅதுல் அகபா 2" (இரண்டாம் அகபா உடன்படிக்கை) என வழங்கப்படுகின்றது. இவ்வேளையிலேயே நபி இல்லல்லாஹ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு யஸ்ரிபுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. *உழைப்பின் முக்கியத்துவம் பற்றிய பொருத்தமான அல்குர்ஆன் வசனம் அல்லது ஹதீஸ் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும். (பார்க்க: பாடநூல் - தரம் 10, பக்கம் 102,103)*

ii. செல்வங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. அவற்றை அவன் மனிதர்களுக்காகப் படைத்துள்ளான். செல்வம் தொடர்பில் மனிதன் மறுமையில் விசாரிக்கப்படுவான். தனி நபர்களின் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு. செல்வத்தை திரட்டுவதற்காக மனிதர்கள் மேற்கொள்ளும் முயற்சி பலனளிப்பதும் பலனளிக்காது இருப்பதும் அல்லாஹ்வின் நாட்டத்தை பொறுத்தது. செல்வம் மனிதனை சோதிப்பதற்காக தரப்பட்டதாகும். *(ஏதேனும் மூன்று)*

iii. அவ்களின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை வணக்கமாகிவிடும். வாங்குவோர் விற்போருக்கு இடையில் நல்லுறவு பேணப்படும். வியாபாரம் ஸ்திரத்தன்மை அடையும். வீண் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாப்பு பெறப்படும். ஹராமான கொடுக்கல் வாங்கலில் இருந்து மீட்சி கிடைக்கும்.

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 117ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 120ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 131ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 137ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)

**தயாரிப்பு:**

அஷ்ஷேக் ஏ.எஸ்.எம். ஹபீழ் (மதனி)

மௌலவி ஆசிரியர் - அ/அல்மாஸ் மகா வித்தியாலயம்